**வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலை - 2018**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுத்த கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்க சமர்ப்பிக்கப்பட வேண்டும் என் நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் போதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படும் கணக்காய்வு அபிப்பிராயங்களின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடல் எனது பொறுப்பாகும். எவ்வாறெனினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்காக அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான சான்றுகளை வழங்க முடியாதிருந்தது.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் இறுதி இருப்பானது கிரயம் மற்றும் தேறிய இற்றைப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதிக்கு அளவிடப்பட வேண்டிய போதிலும், 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இருப்புக்கள் களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பின் கிரயத்தினை கணிப்பிட்டு ரூபா 47,440,818 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 1994.03.31 ஆந் திகதி நிறுவனம் மூடப்பட்டதுடன் 1997 ஆம் ஆண்டில் புதிதாக வருகை தந்த தலைவரால் அனைத்து களஞ்சிய மற்றும் கட்டிடங்களின் இருப்புக்கள் தொடர்பில் மதிப்பாய்வொன்றினை மேற்கொண்டு அவை சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டது. அதன் பின்னர் இருப்பு மதிப்பாய்வு பணிகள் இடம்பெறாததுடன் காலாவதியான இருப்புக்களுக்கான பதிவழிப்பொன்று இடம்பெறவில்லை. அதனால் இந்த இருப்பின் பெறுமதியில் மாற்றமொன்று இடம்பெறவில்லை. | தொழிற்சாலைக்குச் சொந்தமான களஞ்சியங்களில் காணப்படும் இருப்புக்கள் தொடர்பில் மதிப்பாய்வு ஒன்றினை மேற்கொண்டு சரியான இருப்பின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டிற்கு உரியதாக செலுத்த வேண்டிய மேலதிக நேர படிகள் ரூபா 1,987,206 ஆன போதிலும், நிதிநிலைமைக் கூற்றில் அந்த பெறுமதி ரூபா 1,927,252 ஆக ரூபா 59,954 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கு உரியதாக செலுத்த வேண்டிய மேலதிக நேரப் படிகள் பின்வருமாறு<br>01 169,376 07 153,123<br>02 177,216 08 149,871<br>03 176,302 09 117,375<br>04 219,646 10 157,229<br>05 148,648 11 141,298<br>06 149,957 12 165,133<br>மொத்தம் 1,922,154<br>சில்லறை காசேடு பிரகாரம் செலுத்தியது 5,098<br>1,927,252<br><br>இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி சரியானது என குறிப்பிடுகின்றேன். | செலுத்த வேண்டிய மேலதிக நேரப்படிகளினை சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |
| (ஆ) 2005 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடைமுறை வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 840,774 தொகையான மீதி இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 1994.04.01 ஆந் திகதி முதல் கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதனால் அத்திகதியின் பின்னர் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாத நடைமுறை வேலைகள் ரூபா 840,774 ஆன தொகையில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் நிறைவு செய்யப்பட்டுள்ளதா எனும் விபரம் சிவில் பொறியியல் பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான இயலுமை காணப்படவில்லை. | 2005 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் காணப்படும் நடைமுறை வேலைகள் தொடர்பில் சரியாக கணக்கு வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றின் பிரகாரம் பெறுமதி | ஒத்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா மில். | ரூபா | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 73,849,491 | 540 | 466,150,509 | 2007 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் எமது அமைச்சிற்கு உரியதாக இருந்த அமைச்சினால் சொத்துக்களில் மதிப்பீட்டு திணைக்களத்தின் கீழ் | தொழிற்சாலைக்குச் சொந்தமாக காணப்படும் சொத்துக்களை மதிப்பீடு செய்து நியாயப் |

| | | |
|---|---|---|
| | மதிப்பீடு செய்து அதன் பெறுமதி தொடர்பில் எமது நிறுவனத்திற்கு எவ்வித தகவலும் வழங்கப்படவில்லை. | பெறுமதிக்கு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

## 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 16,598,342 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 16,598,342.<br><br>கைத்தொழில் ச: சபைக்கு விற்பனை செய்யும் போது கூடுதலாக ரூபா 16,598,342 ஆன தொகை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்காக மீண்டும் அந்த நிறுவனத்திற்கு இரும்பினை வழங்குதல் இடம்பெறவில்லை. அதனால் எமது நிறுவனம் அந்தப் பணத்தை செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்குகளில் காண்பிக்கப்படும் மீதியினை உறுதிசெய்து கொள்தற்காக உரிய கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1993 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 42,183,209 தொகையான பெறவேண்டிய மற்றும் முன்கொண்டு வரப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை | ரூபா 42,183,209 தொகையான பணத்தில் கந்தளாய் நிறுவனத்திற்கு முன்பு பெற்றுக்கொள்ளப்பட்ட முதலீட்டாளர் ஒருவரான சுமனசேகர அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 14,036,375 ஆன தொகைக்கான விபரங்கள் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் | அறவிடப்பட வேண்டிய பணத்தினை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்காக திரு.சுமனசேகர அவர்களுக்கு எதிராக கந்தளாய் நிறுவனத்தினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இலக்கம் 3805 வழக்கானது இந்த அறவீடுகள் தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், வழக்கிற்கு சுமார் 20 வருட காலம் கடந்துள்ளமையால் மேலதிக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்தப் பணத்தினை அறவிட முடியாது. |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 76,352,246 ஆன தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலையினால் இ.மி.ச க்கு செலுத்த வேண்டிய ரூபா 76,353,246 ஆன பணத்தினை அறவிடுவதற்காக இ.மி.ச இனால் வழக்கு தொடருவதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனைக் கோரியுள்ளதுடன் அந்த கோரிக்கையானது இரு அரச நிறுவனங்கள் இடையேயானது என்பதனால் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | 2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய தொகையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள இராணுவத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 44,839,081 ஆன அளவினை வரவழைத்து தாமதமின்றி முழுத்தொகையும் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நி.பி 756 | 1997 ஆம் ஆண்டின் பின்னர் இருப்பு மற்றும் நிலையான | கந்தளாய் தொழிற்சாலையில் 1994.03.31 ஆந் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பௌதீக இருப்பு |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் தொடர்பில் பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | திகதி மூடப்பட்டதுடன் 1997 ஆம் ஆண்டு புதிதாக வருகை தந்த தலைவரினால் அனைத்து களஞ்சியங்களும் கட்டிடங்களும் தொடர்பில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த களஞ்சியங்கள் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டன. அதன் பின்னர் வருடாந்த இருப்பு மற்றும் மதிப்பாய்வு பணிகள் மேற்கொள்ளப்படாததுடன் 2007 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சொத்துக்களின் மதிப்பீடானது திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு இருப்பின் சரியான தன்மை உறுதி செய்வதற்கும் உரிய சீராக்கலை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பணிகளிலான பெறுபேறுகள் ரூபா 13,192,264 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,769,102 ஆகும். அதன் பிரகாரம், நிதி விளைவின் ரூபா 8,423,162 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரியிலிருந்தான பெறுவனவுகள் ரூபா 11,852,097 ஆக குறைவடைந்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 வருடங்களான காலமாக எவ்வித உற்பத்தி பணிக்கும் பங்களிப்புச் செய்யாது | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு சீனி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | மூடப்பட்டுள்ள கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை மீள ஆரம்பித்து உள்நாட்டு சீனி உற்பத்தியினை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மீள் கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலீட்டாளர்களினால் ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு ஐந்து வருடங்களினுள் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அவ்வாறான எந்தவிதமான முதலீடும் 2020 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்காததுடன் கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான இருந்து அனைத்து இயந்திர உபகரணங்கள் உள்ளடங்கலான கட்டிடங்களின் உரித்தும் இலங்கை அரசிற்கு இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே எந்தவித உற்பத்தியும் மேற்கொள்ளப்படாத இந்த கைத்தொழிற்சாலையில் சேவையில் ஈடுபட்ட ஊழியர்களுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 40.329 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | இந்த தொழிற்சாலையை கூடிய விரையில் மீள்கட்டமைத்து, உற்பத்தி பணிகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கந்தளாய் சீனி தொழிற்சாலையை மீள்கட்டமைப்பதற்காக முதலீட்டாளர் ஒருவருக்கு தெரிவுசெய்யும் போது திறந்த தேர்வு நடைமுறையினை பின்பற்றாது காணிகள் அமைச்சு மற்றும் முதலீட்டுச் | முதலீட்டுச் சபை: காணிகள் அமைச்சரால் 2015 பெப்ரவரி மாதம் 15 ஆந் திகதிய கந்தளாய் சீனி தொழிற்சாலையினை மீள்கட்டமைப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிக்கும் போது முதலீட்டு | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்ப நடைமுறையினை பின்பற்றி வெளிப்படைத்தன்மை யுடன் பொருத்தமான மூதலீட்டாளரொருவ ரை தெரிவு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | சபை ஆகியவற்றுக்கு நேரடியாக கிடைத்த விண்ணப்பங்கள் இரண்டின் அடிப்படையில் முதலீட்டினை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன்போது முதலீட்டிற்கான முன்மொழிவுகளினை கோருதல் போதுமான வெளிப்படைத் தன்மையில் இடம்பெற்றது என அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த நடைமுறைக்குரிய எந்தவொரு ஆவணமும் காணிகள் அமைச்சிடம் காணப்படவில்லை என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சபையின் அது தொடர்பில் முழுமையாக அறிந்திருந்தமை தொடர்பில் அல்லது அந்த அமைச்சரவை பத்திரம் தொடர்பில் அறிந்திராததுடன், அந்த செயற்திட்டங்கள் முதலீட்டுச் சபையின் செயற்திட்டங்களாக பதிவு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.<br><br>காணிகள் அமைச்சு:<br>அமைச்சின் விடயப்பரப்புகள் மாற்றப்பட்டமையால் கந்தளாய் சீனிக் கம்பனிக்குரிய அனைத்து ஆவணங்களும் 2018.04.24 ஆந் திகதி ஆரம்ப கைத்தொழில் அமைச்சிற்க கையளிக்கப்பட்டுள்ளது. அதனால் வினாவிற்கான விடையினை வழங்க முடியாதுள்ளதென தெரிவித்துக்கொள்கின்றேன். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை மீறி நிதி அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகரால் கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை மீள்கட்டமைக்கும் பங்குடமை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பிற்குரிய தொழில்நுட்ப மற்றும் வணிக விடயங்கள் தொடர்பில் மேற்கொண்டு ஆராயாது 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய தீர்ப்பினை முன்வைத்து அந்த உடன்படிய்கையை நன்முறைப்படுத்துவதற்கு சட்டரீதியான சிக்கல்கள் இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தமையை | நிதி அமைச்சு:<br>2016.08.01 ஆந் திகதிய சட்டமா அதிபர் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அவர்களின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட கடிதத்திற்கு பதிலாக மேற்குறிப்பிடப்பட்ட சட்ட ஆலோசகரால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பதில் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்த பதில் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அமைச்சின் செயலாளர் அல்லது வேறு எந்த உத்தியோகத்தரும் அறிந்திருக்கவில்லை என்பதும் ஆவணங்களின் பிரகாரம் புலப்படுகின்றது. அவ்வாறே, சட்டமா அதிபரின் அவதானிப்புகளும் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை | நிதி அமைச்சின் சட்ட ஆலோசகரால் சட்டமா அதிபரின் கூற்று தொடர்பில் அவதானிப்புக்களை முன்வைக்கும் போது நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்து அது தொடர்பில் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் இறுதிபங்குதாரர் உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் தொடர்பில் பரிசோதிக்க வேண்டியதாக இருந்தது. |

அவதானிக்ககூடியதாக இருந்தது.

என்பதும் தொன்படுகின்றது. அவ்வாறே இறுதி உடன்படிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் அந்த 2016.08.01 ஆந் திகதி சட்டமா அதிபரின் அவதானிப்புகள் நிதி அமைச்சின் செயலாளருக்கு முன்வைக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபரின் பொறுப்பாவது அதன் சட்டரீதியான தன்மை தொடர்பில் பரீட்சிப்பது ஆகும். இது தொடர்பில் உரிய அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் அனுமதிகள் உள்ளதா என்பது பரீட்சிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கை இலங்கையின் சட்டங்களுக்கு முரணானதா என்பது பரீட்சிக்கப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளும் போது இந்த உடன்படிக்கை தொடர்பில் 2016.08.01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த திணைக்களத்தின் அடிப்படை கருத்து வெளியிடப்பட்டது. குறித்த உடன்படிக்கையின் 7.1.0 பிரிவின் வரைவாக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் கருத்து வெளியிடப்பட்ட போதிலும், அது உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மைக்கு தீர்வொன்றாக அமையாது பின்னர் 2016.08.04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த உடன்படிக்கைக்கு சட்டரீதியான தடை இல்லை என்பதும் அந்த உடன்படிக்கையின் வணிக ரீதியான மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கப்படவில்லை என்பதும், அந்த விடயங்கள் நிதி அமைச்சினால் கருத்திற் கொள்ளப்பட்டது என்பதும்

| | | | |
|---|---|---|---|
| | | எடுகோளாக்கப்பட்டது என்பதே ஆகும். இந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மற்றும் வணிக ரீதியான விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் பொறுப்புக்கூறுவது இல்லை என கருத்திற் கொள்ளப்படும். | |
| (ஈ) | சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நிதி அமைச்சிற்கு அனுப்பப்பட்ட அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட கடிதத்திற்கு பதிலாக நிதி அமைச்சின் முன்னாள் சட்டஆலோசகரால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பதில் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் திறைசேரியின் செயலாளர் அல்லது மற்றுமொரு உத்தியோகத்தர் ஒருவருக்கு அறிவித்திருக்காதது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இறுதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சந்தர்ப்பத்திலும் மேற்படி 2016.08.01 ஆந் திகதிய சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் திறைசேரியின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி பங்குதாரர் உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சட்ட ஆலோசகரினால் அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பந்திகள் தொடர்பில் உரிய தரப்பினரை அறிவுறுத்த வேண்டியதாக காணப்பட்டது. |
| (உ) | முதலீட்டாளரினால் கைத்தொழிற்சாலைக்கு தேவையான இயந்திர உபகரணங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு முரணாக முதலீட்டாளருக்கு தற்போது காணப்படும் இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதற்கு இயலுமை | நிதி அமைச்சு:<br><br>இந்த முதலீடு தொடர்பில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரத்தில் முதலீட்டாளரால் கைத்தொழிற்சாலைக்கு தேவையான இயந்திரங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது தெளிவாக | சட்ட ஆலோசகரினால் அகற்றுவதற்கு அனுப்பப்பட்ட வரைபில் பங்குதாரர் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாத பந்தியொன்றினை கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கையில் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளதாக குறிப்பிட்டு பந்தியொன்று நிதி அமைச்சின் முன்னாள் சட்ட ஆலோசகரினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த பிரிவினை அகற்றுவதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்ட இறுதிவரைபு பங்குதாரர் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்பது கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதற்கு முரணாக கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கையில் முதலீட்டாளருக்கு தற்போது காணப்படும் இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதற்கு இயலுமை உள்ளதாக குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் திருத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகின்றது.<br><br>எவ்வாறெனினும், இந்த சந்தர்ப்பம் வரையிலும் அந்த உத்தியோகத்தர் நிதி அமைச்சின் சட்ட நடவடிக்கை திணைக்களத்தில் சேவையில் ஈடுபடவில்லையென்பது குறிப்பிடப்பட்டுள்ளது. | உள்ளடக்கியமை தொடர்பில் விசாரணை யொன்றினை மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குரிய கட்டிடங்கள் உள்ளடங்கலான இயந்திர உபகரணங்களை கைதவிர்க்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் உடன்படிக்கையினை கைச்சாத்திட்ட பங்குதாரர் உடன்படிக்கை காரணமாக அமைந்துள்ளமை கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | முதலீட்டுச் சபை: 2017.03.15 ஆந் திகதி இடம்பெற்ற (CCEM) பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் உரிய நிறுவனத்தினால் தொடர்ந்தும் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். | கைச்சாத்திடப்பட்ட பங்குதாரர் உடன்படிக்கையில் அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியொன்று உள்ளடக்கப் படாமையினால் கைதவிர்க்கும் நடைமுறையினை மேற்கொள்ள முடியாதுள்ளது. அதன் காரணமாக அதற்கு காரணமவற்றை இனங்கண்டு அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நிதி அமைச்சின் முன்னாள் ஆலோசகரால் கைச்சாத்திடப்பட்ட பங்குதாரர் உடன்படிக்கைக்கு ஒப்பாக இலங்கை அரசிற்கு தீங்கு ஏற்படும் வகையிலும் முதலீட்டாளருக்கு நன்மை | நிதி அமைச்சு:<br><br>முதலீட்டாளரால் கைத்தொழிற்சாலையின் இயந்திர உபகரணங்களை தமது பயன்பாட்டிற்கு பெற்றுத் தருமாறு கோரி சிங்கப்பூரின் | இலங்கை அரசிற்கு நட்டமேற்படும் வகையிலான நிபந்தனைகள் உடன்படிக்கைக்கு உள்ளடக்கப் பட்டமையினால் |

பயக்கும் விதத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன் சிங்கப்பூர் சர்வதேச தீர்ப்பனவு நிலையத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நட்டஈடாக 894,596.83 சிங்கப்பூர் டொலர் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 211,913.93 ஆன தொகை இலங்கை அரசினால் முதலீட்டாளருக்கு செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப் பட்டுள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக செயற்திட்ட கிரயம் 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது.

சர்வதேச தீர்ப்பனவு நிலையத்தின் தீர்ப்பனவு வழக்கொன்று தொடுக்கப்பட்டது. அந்த வழக்கிற்காக சட்டமா திணைக்களம் அரசு சார்பில் வாதாடியது. கௌரவ சட்டமா அதிபரின் அறிவுரையின் அடிப்படையில் 2018 மார்ச் மாதம் அரசின் பிரதான சாட்சியாளராக காணிகள் அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு.ஐ.எச்.கே.மகாநாம அவர்கள் பெயரிடப்பட்டதுடன் அவரால் அந்த வழக்கிற்காக சாட்சி பதிவேடுகளிலும் கையொப்பம் இடப்பட்டது. அந்த சாட்சி பதிவேடுகள் தீர்ப்பனவு வழக்கிற்கு கோவைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது நிலைமை அவ்வாறு உள்ளபோது 2018 மே மாதம் மேற்படி பெயர் குறிப்பிட்ட முதலீட்டாளரிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்ட குற்றாச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டதுடன் தீர்ப்பனவு வழக்கானது விசாரணை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அதற்காக அரச சாட்சியாக அவரைக் கொண்டு செல்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் நிராகரித்திருந்தது.

அதன் பிரகாரம் அந்த வழக்கில் சீனிக் கைத்தொழிற்சாலையின் இயந்திரங்களினை முதலீட்டாளருக்கு வழங்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. எனினும், முதலீட்டாளரால் அவருக்கு ஏற்பட்ட நட்டமாக மதிப்பிட்டு கோரப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 100 மில்லியன் நட்டஈட்டினை வழங்குவதற்கு தீர்ப்பனவு சபையினால் செலுத்துவதற்கு நேர்ந்துள்ள நட்டஈட்டுத் தொகை அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நீதி அமைச்சும் சட்டமா அதிபர் திணைக்களமும் தீர்ப்பனவு சபையின் முன்னிலையில் விடயங்களை முன்வைத்தன.<br><br>சட்டமா அதிபர் திணைக்களம்:<br><br>இந்த உடன்படிக்கை தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு சர்வதேச தீர்ப்பனவு சபையொன்றினால் நிர்ணயிக்கப்பட்டது. தீர்ப்பனவு தீர்ப்பு நீதிமன்ற தீர்ப்பினைப் போன்று மேன்முறையீட்டிற்கு உட்படுத்த முடியாது. அதனால் இந்த தீர்ப்பனவு சபையின் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடொன்றினை முன்வைப்பதற்கு சட்டத்தில் இடம்காணப்படவில்லை. | |
| (ஏ) | வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலையினை மீள்கட்டமைப்பதற்கு உரியதான தொடர்புடைய நிறுவனங்களான நிதி அமைச்சு, காணி மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் முதலீட்டு சபை ஆகிய நிறுவனங்களிடையே சிறந்த இணைப்பொன்று இல்லாமை அமைச்சரவை பிரமாணம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் 1994 ஆம் ஆண்டு முதல் சீனி உற்பத்தி பணிகள் நிறுத்தப்பட்ட கந்தளாய் சீனி கைத்தொழிற்சாலை கணக்காய்வுத் திகதி வரையிலும் பொருத்தமான முதலீட்டாளரொவருக்கு ஒப்படைக்கப்பட முடியாத காரணத்தினால் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாது உள்ளது. | வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலையினை மீள் கட்டமைப்பதற்கு உரிய தீர்மானத்தினை எடுத்தல் புறம்பான செயலொன்றாவதுடன் அது அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும். அதற்கு அவசியமான விபரங்கள் எம்மிடம் இல்லை. | சீனிக் கைத்தொழிற் சாலையினை மீள்கட்டமைக்பும் பணிகள் துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | கைத்தொழிற்சாலைக்குச் | அத்துமீறிய குடியிருப்பாளர்கள் | உத்தியோகபூர்வ |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறிக் குடியிருக்கும் 96 பேர் அந்த உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து அகற்றுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 96 பேர் இற்கு முன்னாள் காணி அமைச்சரான திரு.எம்.கே.டீ.எஸ்.குணவர்த்தன அவர்களால் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு காணிகளின் ஒரு பகுதி சீனிக் கைத்தொழிற்சாலையின் நிலப்பிரதேசத்தில் வழங்கப்பட்டு வீடுகளிலிருந்து அப்புறப்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் மரணமடைந்த காரணத்தினால் தாமதமடைந்திருந்தது. | இல்லங்களில் அத்துமீறிக் குடியிருப்போர் அகற்றப்பட்டு அந்த வீடுகளினை பாதுகாப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | கைத்தொழிற்சாலைக் குரிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் காணிகள் சுத்திகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் Jungle Cleaning எனும் பெயருடைய உயர் பெறுமதி வாய்ந்த சங்கிலி ஒன்று இதுவரையிலும் புற்கள் மண்டி காணப்படுகின்றமை கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலைக்குச் சொந்தமான இந்த சொத்துக்கள் சேதமடைவதற்கு இடமளிக்காது பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | கைத்தொழிற்சாலைக்கு சூடான நீரினை குளிர்விப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பாரியளவிலான கொள்கலன்களின் தொகுதி மற்றும் நீர் வடிப்பாண்கள் (Water Filtering) கட்டமைப்பில் மழை நீர் தேங்கி நுளம்புகள் பெருகும் இடமொன்றாக மாறியுள்ளதாக கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மழை நீர் தேங்கி நிற்பதனை தடுப்பதற்காக அந்த சுற்றாடலினை சுத்தமாக வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | கைத்தொழிற்சாலையின் சூழலில் காணப்படும் வாகனங்கள் உரிய பாதுகாப்புடன் மற்றும் கவசத்துடன் இல்லாது சுமார் 25 வருட காலமாக துருப்பிடித்தவாறு | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்களை கைதவிர்க்கும் வரையில் அவற்றை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றமை கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டதுடன் கேள்வி நடைமுறைக்காக வாகனங்களில் செஸி இலக்கம் வெட்டப்பட்டுள்ள போதும் இயந்திர உபகரணங்கள் உள்ளடங்கலான உரித்து முதலீட்டாளருக்கு சார்ந்துள்ளமையின் அடிப்படையில் கேள்வி நடைமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் செஸி இலக்கங்களை அகற்றியமையின் காரணமாக வாகனங்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. | | வேண்டியதுடன், அவற்றை துரிதமாக கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | வருடாந்தம் சுமார் 16,320 மெற்றிக்தொன் சீனி, 9,000 மெலிசெஸ் மற்றும் எரிதிரவம் 3.9 லீற்றர் எனும் உற்பத்தி இயலுமையுடனான வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி கைத்தொழிற்சாலை தற்காலிகமாக 1993 செப்தெம்பர் 01 ஆந் திகதி அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 1994 ஏப்ரல் மாதம் முதல் சீனி உற்பத்தி பணிகள் இடம்பெறாமையினால் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்களின் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில்கள் இழக்கப்பட்டிருந்தது. மேலும், 1991 ஆம் ஆண்டு மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 125 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் மற்றும் கைத்தொழிற்சாலை வளாகத்தில் காணப்படும் வாகனங்கள் உரிய பாதுகாப்பு மற்றும் கவசமின்றி காணப்பட்ட காரணத்தினால் | இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்கு தற்போது சுமார் 25 வருட காலம் கடந்துள்ளமையால் அவை அழிவடைந்தவாறு உள்ளன. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்களை ஏலமிடுவதற்கு அமைச்சு தீர்மானித்திருந்த போதிலும் இது வரையிலும் எவ்வித நடைமுறையும் காணப்படவில்லை. பெருந்தொகையான இருப்பினை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த பெருந்தொகையான பணம் தேவைப்படுகின்றது. | 1994 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டவாறு உள்ள இந்த நிறுவனத்தை மீள கட்டமைத்து பொருத்தமான முதலீட்டாளர் ஒருவருக்கு கையளிப்பதற்கும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. அவ்வாறே மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2012 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் கடந்த 5 வருட காலப்பகுதியில் வாகனங்களின் பெறுமதி ரூபா 12,463,500 இனால் குறைவடைந்திருந்த போதிலும், பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான காணிகளின் அளவான 8596 ஹேக்டயர்கள் காணப்படுவதுடன் அவற்றுள் 164 ஹேக்டயர் பரப்பளவில் சீனிக் கைத்தொழிற்சாலை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களின் தொகுதி தாபிக்கப்பட்டுள்ளது. சீனிக் கைத்தொழிற்சாலையினை செயற்படும் நிலையில் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் 4,800 ஹேக்டயர்கள் பரப்பளவில் கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தற்போது எந்த காணியிலும் கரும்பு பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இடம்பெறாததுடன், அத்துமீறிய பயிர்ச்செய்கை யாளர்களினால் நெல் பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைக்காக இந்த காணி அத்துமீறி கைப்பற்றப்பட்டிருந்த போதிலும், அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர் களை அகற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை

647 கரும்பு பயிர்ச்செய்கை காணிகள் பயிர்ச்செய்கை யாளர்களுக்கு மாத்திரம் 2 ¾ ஏக்கர்கள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 500 கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பயிர்ச்செயகை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் மூலம் 110 ஏக்கர் அளவில் கரும்பு பயிரிடப்படுவதுடன் விதை கரும்பு உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது. எம்.ஜீ.சீனி லங்கா தனியார் கம்பனிக்கு உடன்படிக்கையின் பிரகாரம் 500 ஏக்கர்கள் வழங்கப்பட்டுள்ளது. (விதை கரும்பு மற்றும் கைத்தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு) பெரும்போகத்தில் நெல் பயிரிடுவதற்கு பயிர்ச்செய்கை யாளர்களுக்கு 1 ஏக்கர் ரூபா 1,000 படி வழங்கப்பட்டு போகத்தின் இறுதியில் அவர்கள் இந்த காணியை கைவிட்டுவிடுவர். அந்தக் காணியை அத்துமீறி கைப்பற்ற முடியாது.

கைத்தொழிற்சாலைக்கு சொந்தமான காணிகளில் பலவருடங்களாக எந்தவித பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் அந்த காணிகளை அத்துமீறி கைப்பற்றுவதற்கு இடமுள்ளமையால் அவற்றினை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | | |
| (கி) | 2017 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 133,150,000 ஆன பெறுமதியுடனான கைத்தொழிற்சாலை வளாகத்திற்குரிய தலைமை அலுவலகக் கட்டிடம், களஞ்சிய அறை, ஆய்வுகூடம், சீனிக் களஞ்சிய சாலை, பாதுகாப்புக் கட்டிடம், உத்தியோகபூர்வ இல்லம் போன்ற கட்டிடங்களின் தொகுதியினை பேணுவதற்கு முடியாமை மற்றும் அவற்றிற்கு உரிய பாதுகாப்பு இல்லாமை ஆகிய காணரங்களினால் அந்த கட்டிடங்கள் பெரும்பாலனவற்றில் யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற விலங்குகளினால் சேதங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், களஞ்சிய சாலைகளில் மற்றும் கைத்தொழிற்சாலையில் உள்ள தளபாடங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் பொறிகள் ஆகியவற்றின் உதிரிப்பாகங்கள் உள்ளடங்கலான பெறுமதி வாய்ந்த இருப்புக்கள் சேதமடைந்தவாறு காணப்படுகின்றது. | நிறுவனத்தின் கட்டிடங்களை பராமரிப்பதற்கு அமைச்சின் மூலம் பணம் ஒதுக்கப்படுதல் இடம்பெறுவதில்லை. அவற்றை சுத்திகரிப்பதற்கு ஊழியர்களும் இல்லை. காணி அமைச்சின் மூலம் இயந்திர உபகரணங்கள் மற்றும் தொழிற்சாலையில் உள்ள பொருட்கள் கைத்தொழிற்சாலையினை ஏலம் விற்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், இதுவரையிலும் அதற்கான தீர்மானமொன்று எட்டப்பட்டிருக்கவில்லை. கட்டிடங்களில் காட்டு யாளைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு வனசீவராசி திணைக்களத்திற்கும் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத சொத்துக்களை கைதவிர்ப்பதற்கும் ஏனைய சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்க வேண்டும். |
| (கீ) | கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான பெறுமதியான கல்வனைஸ் குழாய்கள் எவ்வித கவசங்களுமின்றி பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டுள்ளதுடன், மேலும், இரும்புக் கம்பி இருப்பொன்று நிறுவனத்தின் அண்மையில் உள்ள இராணுவ முகாமிற்கு மற்றும் விகாரையின் பணிகளுக்காக | கைத்தொழிற்சாலைக்கு உரிய இயந்திர குழாய்களினை விகாரை மற்றும் இராணுவத்திற்கு வழங்குவதற்கு முன்னாள் பொது முகாமையாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மீள அந்த குழாய்களினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை | கைத்தொழிற்சாலைக்குச் சொந்தமான களஞ்சியங்களில் காணப்படும் இருப்புக்களை பாதுகாப்பாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும், அவை மீள நிறுவனத்திற்கு மீள பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கின்றேன். | |
| (கு) | காணிகள் அமைச்சின் மூலம் கந்தளாய் சீனிக் கைத்தொழிற்சாலை பூமியில் அமைந்துள்ள கட்டிடங்களினை உடைத்து அகற்றுதல் மற்றும் பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை விற்பனை செய்வதற்காக 2017 யூன் 05 ஆந் திகதி கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் காணிகள் அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரினால் இலஞ்சம் பெற்றுக் கொண்டமைக்கான குற்றஞ்சாட்டின் குற்றவாளிகளாக காணப்பட்டமையினால் நீதிமன்றத்தினால் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2016 ஆகஸ்ட் 11 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட பங்குடமை ஒப்பந்தத்தின் பிரகாரம் கைத்தொழிற்சாலையினை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத கட்டிடங்கள் மற்றும் களஞ்சிய பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை கைதவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |